தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.
தொலைபேசி: 044 – 22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்
*******

ஆணை எண் 168 /ந/2023
நாள் 04.09.2023

திரு.வெ.நாராயணசாமி,
வடலூர், கடலூர் மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்

ஆணையாளர்,
வடலூர் நகராட்சி,
கடலூர் மாவட்டம். – எதிர் மனுதாரர்

கடலூர் மாவட்டம், வடலூர், பண்ருட்டி மெயின் ரோடு, ஆபத்தாரணபுரம், ரைஸ்மில் தெரு, எண்.16/125–G என்ற முகவரியில் வசிக்கும் திரு.வெ.நாராயணசாமி என்பவரின் 02.06.2023 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 05.06.2023 அன்று பெறப்பட்டு 168/ந/2023 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மேற்கண்ட மனு மீது தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தால் உரிய விசாரணை மேற்கொள்ளப்பட்டு அதன் அடிப்படையில் பரிசீலனை செய்யப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

கடலூர் மாவட்டம், வடலூர், பண்ருட்டி மெயின் ரோடு, ஆபத்தாரணபுரம், ரைஸ்மில் தெரு, எண்.16/125–G என்ற முகவரியில் வசிக்கும் திரு.வெ.நாராயணசாமி என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள தனது புகார் மனுவில் கீழ்க்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்:–

ஆபத்தாரணபுரம் வார்டு 9–ல், ரைஸ்மில் தெருவில் 150 அடி அகலமுள்ள ஒரு நீரோடை புறம்போக்கு பொது இடம். மழைக்காலங்களில் மழைநீர் செல்வதற்கான கால்வாய்களை முறையாக தெருவின் இருபுறமும் அமைக்காமல் ஓடையின் நடுவில் 16 அடி அகலத்தில் ரோடு அமைத்த உள்ளூர் நகர நிர்வாகம், இருபுறமும் உள்ள மீதி இடத்தை சில தனி நபர்கள் நீண்ட தூரம் ஓடும் ஓடை முழுவதும் ஆக்கிரமிப்பு செய்துள்ளதை அளந்து ஆக்கிரமிப்புகளை அகற்றுவது சம்பந்தமாக புகார் அளித்தும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

என்னுடைய மனை புல எண்கள்.64/3B, 64/3C (தனியாருக்கான பொதுப் பாதை), 64/3E உடன் சம்பந்தப்பட்ட புல எண்.64/3A (காலி மனை) மற்றும் 64/3D (வீடு) அரசாங்க

நீரோடை புறம்போக்கு இடத்தை ஆக்கிரமிப்பு செய்து திரு.வாசுதேவலு, திரு.பிரவின் போன்ற நபர்கள் பத்திரப் பதிவு செய்துள்ளார்கள். திரு.பிரவின் என்பவர் புல எண்.64/3D–ல் பழைய ஓட்டு வீட்டை இடித்துவிட்டு புதியதாக மாடி வீட்டை நீரோடை புறம்போக்கு இடத்தை ஆக்கிரமிப்பு செய்து வீடு கட்டியதை அப்போதைய பேரூராட்சி செயல் அலுவலருக்கு 01.06.2020–ல் மின்னஞ்சல் மூலமாக கட்டட வரைபடத்தை ஒப்புதல் அளிக்க கூடாது என ஆட்சேபனை புகார் அனுப்பப்பட்டது. இந்த கடிதத்தின் பிரதியை அ1 ஊழியர் திரு. முத்துராமன் என்பவர் நடவடிக்கை எடுக்காமல் என்னிடமே திருப்பி கொடுத்துவிட்டார். மறுபடியும் இதே கடிதத்தை நான் கடலூர் மாவட்ட பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அவர்களிடம் சமர்ப்பித்த நிலையில் அவரும் 30.11.2020–ல் நடவடிக்கை எடுக்கும்படி கூறினார். அதற்கும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

மேலும், 18.01.2021–ல் நடந்த கடலூர் மக்கள் குறை தீர்க்கும் நாளில் கொடுக்கப்பட்ட புகார் மனு மீது 22.01.2021 அன்று குறிஞ்சிப்பாடி வட்டாட்சியருக்கு அளக்கச்சொல்லி கடிதம் அ1 ஊழியர் திரு. முத்துராமன் மற்றும் அப்போதைய செயல் அதிகாரி திரு. சீனுவாசன் என்பவரால் அனுப்பப்பட்டது. அதன் பிரதி எனக்கு தரப்படவில்லை. நகராட்சியாக மாறிய பின், பின்னாளில் 30.12.2021–ல் அதிகாரபூர்வமற்ற முறையில் தரப்பட்டது. அதே போல் 25.05.2022–ல் தமிழ்நாடு தகவல் ஆணையரால் Video Conference மூலம் நடத்தப்பட்ட விசாரணையில் கலந்து கொண்ட அ1 ஊழியர் திரு. முத்துராமன் என்பவரால் 27.05.2022–ல் மறுபடியும் குறிஞ்சிப்பாடி வட்டாட்சியருக்கு அளக்கச்சொல்லி கடிதம் அனுப்பப்பட்டது.

04.07.2022–ல் நடந்த கடலூர் மாவட்ட மக்கள் குறை தீர்க்கும் நாளில் கொடுக்கப்பட்ட புகார் மனு மீது 05.07.2022 அன்று குறிஞ்சிப்பாடி வட்டாட்சியருக்கு அளக்கச்சொல்லி கடிதம் அனுப்பப்பட்டது. அதன் அடிப்படையில் நீண்ட போராட்டத்திற்குப்பின் 01.12.2022–ல் அளக்க தேதி நிர்ணயிக்கப்பட்ட நிலையில் அது தடுத்து நிறுத்தப்பட்டது. வடலூர் நகராட்சி ஆணையர் திரு. குணாளன், அ1 ஊழியர் திரு.முத்துராமன் அவர்களும் மறுபடியும் அளக்கச்சொல்லி, எந்த முயற்சியும் எடுக்கவில்லை. நான் தமிழ்நாடு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு 20.08.2022–ல் மின்னஞ்சலில் புகார் அனுப்பிய நிலையில் மறுபடியும் 08.09.2022–ல் முந்தைய ஆணையர் திரு.குணாளன் மற்றும் அ1 ஊழியர் திரு.முத்துராமன் அவர்களால் கடிதம் அனுப்பப்பட்டது.

06.04.2023, 13.04.2023 மற்றும் 17.04.2023 –ல் குறிஞ்சிப்பாடி வட்டாட்சியருக்கு அளக்கச்சொல்லி தற்போதைய நகராட்சி ஆணையர் திருமதி.மு.பானுமதி என்பவரால் கடிதங்கள் அனுப்பப்பட்டன. ஆனால் இன்று வரை அளக்கப்படவில்லை. மேலும் மேற்கண்ட புல எண்.64/3D–ல் கட்டப்பட்ட வீட்டை நேரில் வந்து கள ஆய்வு செய்யாமல், ஆக்கிரமிப்புகளை பார்க்காமல், வீட்டின் அளவுகளை சரிபார்க்காமல், புல எண்.64/3C–ன் பொது பாதையை ஆக்கிரமித்து ஜன்னல் சன்ஷேட் இருப்பதையும் பார்க்காமல், அரசாங்க விதிப்படி வீட்டை சுற்றி 3 அடி அகலத்திற்கு இடைவெளி விடப்பட்டுள்ளதா என்பதையும் பார்க்காமல், அந்த இடம் புல எண்.64/3D முழுவதும் அவர் பெயரில் மட்டும் தான் உள்ளதா என்பதை பார்க்காமலும் முறைகேடாக பட்டா பெயர் மாறுதல் செய்யப்பட்ட நிலையில், விதிகளை மீறி கட்டப்பட்ட வீட்டிற்கு கட்டட ஒப்புதல் வழங்கிய அ1 ஊழியர் திரு.முத்துராமன், இன்னாள் மற்றும் முன்னாள் நகராட்சி ஆணையர்கள் மற்றும் முந்தைய பேரூராட்சி செயல் அலுவலர் முறையாக செயல்படவில்லை.

அதேபோல் அரசாங்க நீரோடை புறம்போக்கு இடத்தை ஆக்கிரமிப்பு செய்து, அந்த வீட்டின் செப்டிக் டேங்க் கட்டியும், குளியலறை கட்டியும் அதன் கழிவு நீரும், உள்பக்கமுள்ள குளியலறையின் கழிவு நீரையும் சேர்த்து அதற்கான கழிவு நீர் தொட்டியும் கட்டி ஆக்கிரமிப்பு பகுதியில் ஷெட் போட்டு சுற்றுச்சுவர் எழுப்பி, பின் வேலி அமைத்து அது எதுவும் தெரியாதபடி சுற்றி பச்சை நிற நெட் அமைத்திருப்பதை புகார் செய்தும் கட்டட ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

தற்போது ஓட்டு வீட்டு வரியையே மாடி வீட்டிற்கும் வரி விதிப்பு செய்து அரசாங்கத்திற்கு இழப்பு ஏற்படுத்தியுள்ளார்கள். மேற்படி நபர் திரு.பிரவின் புல எண்.64/3A சப்-டிவிஷன் செய்யப்படாத நிலையில் அந்த இடத்திற்கு முன்புறமுள்ள அரசாங்க நீரோடை புறம்போக்கு இடத்தில் 7 அடி ஆழத்திற்கு பள்ளம் தோண்டியதை ஆட்சேபித்து முந்தைய ஆணையருக்கு தெரிவித்தும் நடவடிக்கை இல்லை. இதனால் ஒவ்வொரு வருடமும் மழைக்காலங்களில் எனக்கு சொந்தமான மூன்று வாடகை வீட்டிற்குள் மழை நீருடன் கழிவு நீரும் கலந்து வீட்டிற்குள் புகுந்து விடுகிறது. தமிழ்நாடு தகவல் ஆணையரால் வாய்மொழி உத்தரவாக போடப்பட்டும் நகர நிர்வாகம் அந்த பள்ளத்தை மூடவில்லை. கடந்த வருடம் நவம்பர் 2022-ல் மழை பெய்ய ஆரம்பித்த நிலையில், உடனே கடலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இயங்கும் Disaster Management அலுவலகத்திற்கு போன் செய்தவுடன் அவர்கள் நகராட்சி ஆணையருக்கு தகவல் அளிக்க, நான் பலமுறை திரு. சரவணகுமார், RI-க்கும், திரு. ஆறுமுகம் மேஸ்திரிக்கும் நேரில் சொல்லியும் கேட்காமல் Political Pressure இருப்பதாக கூறி தவிர்த்தவர்கள், உடனே செய்து, எங்களுடைய பொது பாதையை நடப்பதற்கும், இரண்டு மற்றும் நான்கு சக்கர வாகனம் செல்ல முடியாதபடி தோண்டிப் போட்டதால் இரண்டு நகராட்சி Water line Puncture செய்து, ஒன்றரை அடி சிமெண்ட் பைப் இரண்டு வாங்கி போட்டதால் அன்று எனக்கு ரூபாய் 10,000/- செலவு ஆனது. இது மட்டுமல்லாமல் அதை தோண்டிய JCB -க்கு பணம் தரவேண்டும் என்று கூறி என்னிடமே ரூபாய் 1000-த்தை, திரு. ஆறுமுகம் மேஸ்திரி வீட்டிற்கு வந்து பெற்றுச் சென்றார். இவரே ஒரு முறை வார்டு மெம்பரை எதிர்த்துக் கொண்டு ஓடை புறம்போக்கு இடத்தை அளந்து ஆக்கிரமிப்புகளை அகற்றி என் வேலையை விடத்தயாரில்லை என்றார். இதே போல் அ1 ஊழியர் திரு.முத்துராமன் அவர்களிடம் தமிழ்நாடு தகவல் ஆணையர் கடிதத்தில் சொல்லப்பட்ட தண்டனை தொகை ரூ.25,000/-ஐ வேண்டுமானால் கட்டிவிடுகிறேன். வார்டு மெம்பரை எதிர்த்துக் கொண்டு அளக்க முயற்சி எடுக்கமாட்டேன் என்று கூறிவிட்டார். அதனால் இவர்கள் மீது துறை ரீதியான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

நகராட்சி ஆணையர், ஆக்கிரமிப்புகளை அகற்ற வட்டாட்சியர் அளக்க வேண்டும் என்று சொல்ல, வட்டாட்சியர் அவர்களோ இது நகராட்சி நிர்வாகத்தின் கீழ் வருகிறது நாங்கள் அளக்க மாட்டோம் என்று தெரிவிக்கிறார்கள். இதன் விபரங்கள் மாவட்ட நிர்வாகத்திற்கும், நகராட்சி நிர்வாக இயக்குநருக்கும், தமிழ்நாடு தகவல் ஆணையத்திற்கும் அனுப்பப்பட்டுள்ளது. தமிழ்நாடு தகவல் ஆணையம் இந்த பிரச்சனையை வழக்காக SA-D-14149, Dt.01.06.2022-ல் பதிவு செய்யப்பட்டு நிலுவையில் உள்ளது. அவர்களின் அறிவுறுத்தலின்படியும் எந்தவிதமான தகவலும் அளிக்காமலும், ஆக்கிரமிப்பு அகற்றாமலும் மேற்கண்ட நபர்கள் திரு.பிரவின் வீட்டை இடிக்கப்படாமல் காப்பாற்றுவதிலும் திரு.பிரவின் மற்றும் திரு.வாசுதேவலு என்பவரின் காலி மனைகளை காப்பாற்றுவதிலும், அக்கறையோடு இருப்பதால் நகராட்சி அலுவலர்கள் மீது நடவடிக்கை எடுப்பதுடன், அளந்து ஆக்கிரமிப்புகளை உடனே அகற்றுவதற்கான ஏற்பாடுகளை செய்யும்படி தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

2) மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 12.06.2023 நாளிட்ட அறிவிப்பு மூலம் வடலூர் நகராட்சி ஆணையரிடம் கோரப்பட்டது.

வடலூர் நகராட்சி ஆணையாளர் தனது 28.06.2023 நாளிட்ட அறிக்கையில் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு முறையே கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்.

வடலூர் நகராட்சி, ஆபத்தாரணபுரம், ரைஸ்மில் தெரு, புல எண்.64/3A, 3B, 3C, 3D மற்றும் 3E நீரோடை புறம்போக்கு ஆக்கிரமிப்பு செய்து வீடு கட்டியுள்ளதாக திரு.வி.நாராயணசாமி என்பவரின் புகார்மனு தொடர்பாக வருவாய் வட்டாட்சியர் குறிஞ்சிப்பாடி அவர்களுக்கு ஆக்கிரமிப்பு குறித்து அளவீடு செய்து அறிக்கை வழங்க கோரி பலமுறை கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. வடலூர் நகராட்சியில் ஆக்கிரமிப்பு குறித்து நில அளவை மேற்கொள்ள நில அளவையர் (சர்வேயர்) பணியிடம் இல்லாததால் மேற்காணும் புகார்மனு மீது நடவடிக்கை மேற்கொள்ள இயலாவண்ணமாக உள்ளது.

வருவாய் வட்டாட்சியர், குறிஞ்சிப்பாடி அவர்களுக்கு 19.06.2023 அன்று நினைவூட்டல் கடிதம் வைக்கப்பட்டுள்ளது. எனவே, வருவாய் வட்டாட்சியர் அளவீடு செய்து ஆக்கிரமிப்பு குறித்து அறிக்கை பெறப்பட்ட பின்பு மேல்நடவடிக்கை எடுக்கப்படும் என்பது பணிவுடன் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது'' என தெரிவித்துள்ளார்.

(3) மனுதாரும் மற்றும் வடலூர் நகராட்சி ஆணையரும் 24.07.2023 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு 12.07.2023 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

(4) மனுதாரர் திரு.வெ.நாராயணசாமி 24.07.2023 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார். அதில்

வடலூர் நகராட்சி, ஆபத்தாரணபுரம், வார்டு 9, ரைஸ்மில் தெருவில் புல எண் 64/3A, 64/3C, மற்றும் 64/3D-ல் 150 அடி அகலமுள்ள நீரோடை புறம்போக்கு இடத்தை ஆக்கிரமிப்பாளர்கள் ஆக்கிரமித்து ஒரு பகுதியை நிலமாகவும் மற்றொரு பகுதியை வீடாகவும் கட்டி ஆக்கிரமிப்பு செய்துள்ளனர். இதனால் மழைக்காலங்களில் மழை நீர் செல்வதற்கு வழியில்லாமல் எங்கள் வீடு அமைந்துள்ள பகுதியிலேயே மழைநீர் சூழ்ந்து வருகிறது. இதனால் மக்களுக்கு சுகாதார சீர்கேடு ஏற்பட்டு வருகிறது. மேற்கண்ட ஆக்கிரமிப்புகளை அகற்ற மாவட்ட ஆட்சியர் மற்றும் நகராட்சி அலுவலகத்தில் புகார் செய்யப்பட்டும், எனது புகாரின் மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. நகராட்சி அலுவலர்களை அணுகியபோது வட்டாட்சியர் மேற்கண்ட இடத்தை அளக்க வேண்டும் எனவும், வட்டாட்சியரை அணுகியபோது நகராட்சி நிர்வாகத்தின் கீழ் வருவதால், நகராட்சியினர்தான் மேற்கண்ட பணியை செய்யவேண்டும் எனவும் கூறி வருகின்றனர்.

எனவே, மேற்கண்ட புல எண்ணில் அமைந்துள்ள, ஏற்கனவே ஓடையாக இருந்த இடத்தை முறைப்படி அளவீடு செய்து, அங்குள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றிட ஆவன செய்யுமாறு இம்முறைமன்றத்தை கேட்டுக்கொள்கிறேன் என தெரிவித்துள்ளார்.

மேலும், எனது 02.06.2023 நாளிட்ட மனுவில் கண்டுள்ள விவரங்களையும் எனது மேல் வாக்குமூலமாக பதிவு செய்துகொள்ளும்படி இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்.

இந்நேர்வு தொடர்பான, மேற்கண்ட புல எண்கள் 64/3A, 64/3C, மற்றும் 64/3D-ன் **'அ'** பதிவேட்டின் ('A' Register) நகலினை கிராம வருவாய் அலுவலரிடம் பெற்று இன்னும் 1 வார காலத்தில் இம்முறை மன்றத்தில் சமர்ப்பிக்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.

(5) எதிர்மனுதாரரான வடலூர் நகராட்சி ஆணையாளர் சார்பாக வடலூர் நகராட்சியில் நகரமைப்பு ஆய்வாளர் (பொறுப்பு) திருமதி.P.நிர்மலா தேவி என்பவர் 24.07.2023 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்.

வடலூர் நகராட்சி, ஆபத்தாரணபுரம், ரைஸ்மில் தெரு, புல எண் 64/3A, 3B, 3C, 3D மற்றும் 3E நீரோடை புறம்போக்கு இடம் சிலரால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளதாக பெறப்பட்ட புகார் மனுவைத் தொடர்ந்து, மேற்கண்ட இடத்தை அளவீடு செய்து அறிக்கை அளிக்குமாறு குறிஞ்சிப்பாடி வருவாய் வட்டாட்சியருக்கு 26.5.2022 முதல் கடிதம் அனுப்பப்பட்டது. மேலும் 19.6.2023 அன்றும் நினைவூட்டுக் கடிதம் அனுப்பப்பட்டது. ஆனால் இதுவரை வருவாய்த்துறையினரால் மேற்கண்ட இடம் அளவீடு செய்யப்படவில்லை என இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் இம்முறை மன்றத்தில் என்னால் சமர்ப்பிக்கப்படும் வடலூர் நகராட்சி ஆணையரின் 21.7.2023 நாளிட்ட கடிதத்தில் கண்டுள்ள விவரங்களையும் எனது மேல் வாக்குமூலமாக எடுத்துக்கொள்ளும்படி இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்'' என தெரிவித்து அக்கடிதத்தை சமர்ப்பித்துள்ளார்.

(6) முறையீட்டு மனுதாரரின் புகார் மனு, வாக்குமூலம், வடலூர் நகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் நகராட்சி ஆணையர் சார்பாக ஆஜரான வடலூர் நகராட்சி நகரமைப்பு ஆய்வரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.

கடலூர் மாவட்டம், வடலூரைச் சேர்ந்த மனுதாரர் திரு.வெ.நாராயணசாமி என்பவர் தனது 02.06.2023 நாளிட்ட முறையீட்டு மனுவில், வடலூர் நகராட்சிக்குட்பட்ட ஆபத்தாரணபுரம் வார்டு எண்.9–ல் ரைஸ்மில் தெருவில் 150 அடி அகலமுள்ள நீரோடை புறம்போக்கு இடத்தில் 16 அடி அகலத்தில் நகராட்சியினர் சாலை அமைத்துள்ள நிலையில், மீதமுள்ள இடத்தில் சில நபர்கள் அதாவது புல எண்.64/3A (காலிமனை), 64/3C (பொது பாதை) 64 (D) (வீடு) ஆகியவற்றை ஆக்கிரமிப்பு செய்துள்ளதாக புகார் தெரிவித்து, அதனை அகற்றுவதற்கு ஆவன செய்யுமாறு கோரியுள்ளார்.

மேற்காணும் மனுதாரர் திரு.வெ.நாராயணசாமி என்பவரிடமிருந்து வரப்பெற்ற புகார் மனுவினை தொடர்ந்து நகராட்சியில் தொடர் நடவடிக்கை எடுக்கும் பொருட்டு மேற்காணும் ஆக்கிரமிப்பு குறித்து அளவீடு செய்து அறிக்கை வழங்கக் கோரி குறிஞ்சிப்பாடி வருவாய் வட்டாட்சியருக்கு 26.05.2022, 08.09.2022, 06.04.2023 மற்றும் 19.06.2023 நாளிட்ட கடிதங்கள் அனுப்பியும் இந்நாள்வரை மேற்காணும் இடம் வருவாய்த் துறையினரால் அளவீடு செய்யப்படவில்லை என்பதை ஆவணங்களின் மூலம் அறிய முடிகிறது.

மனுதாரர் திரு.வெ.நாராயணசாமி என்பவர் இம்முறைமன்ற நடுவத்தில் அளித்துள்ள வாக்குமூலத்தின்படியும், மனுதாரர் சமர்ப்பித்துள்ள ஆவணங்களை ஆய்வு செய்தவகையிலும்

ஆபத்தாரணபுரம் புல எண்.64 (1) (2) (3) (4) மற்றும் (5) ஆகியவை தரிசு என்கிற வகைப்பாட்டில் உள்ளது என குறிஞ்சிபாடி வட்ட கிராம நிர்வாக அலுவலர் சான்றொப்பமிட்ட ஆபத்தாரணபுரம் நிலவரித்திட்டப் பதிவேட்டு நகலின் மூலம் தெரிய வருகிறது. ஆனால் இதுகுறித்து 'அ' பதிவேட்டில் பதிவு செய்யப்பட்ட 'அ' பதிவேட்டின் நகல் மனுதாரர் கூறியவாறு இம்முறைமன்றத்தில் மனுதாரர் சமர்ப்பிக்கவில்லை. இந்நிலையில், மனுதாரர் புகாராக தெரிவிக்கும் கடலூர் மாவட்டம், வடலூர், ஆபத்தாரணபுரம் வார்டு எண்.9–ல் ரைஸ்மில் தெருவில் அமைந்துள்ள புல எண்.64/3A, 64 (3C) 64 (D) இடங்கள் குறித்து கடலூர் வருவாய்க் கோட்டாட்சியர் மற்றும் வட்டாட்சியர் நேரடியாக களஆய்வு செய்து, மேற்படி நிலமானது ஓடை வகைப்பாட்டில் அமைந்திருந்து, அதில் ஆக்கிரமிப்புகள் செய்யப்பட்டிருப்பின், ஆக்கிரமிப்புகளை அகற்றுவதற்கு உரிய நடவடிக்கையினை மேற்கொள்ளுமாறும் மற்றும் அதன் அறிக்கையினை இம்முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பி வைக்குமாறும் கடலூர் மாவட்ட ஆட்சியரை அறிவுறுத்தி இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2023 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 04–ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1) மாவட்ட ஆட்சியர்,
கடலூர் – 607 001. கடலூர் மாவட்டம்.

2) திரு.வெ.நாராயணசாமி,
எண்.16/125–G, ரைஸ்மில் தெரு, ஆபத்தாரணபுரம்,
பண்ருட்டி மெயின் ரோடு, வடலூர் – 607 303,
கடலூர் மாவட்டம்.

3) ஆணையாளர், வடலூர் நகராட்சி,
வடலூர் – 607 303, கடலூர் மாவட்டம்.

4) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகர் நிர்வாக அலுவலக வளாகம், நெ.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28.

5) இணை இயக்குநர் /ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
நகர் நிர்வாக அலுவலக வளாகம், நெ.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28. (பெயரிடப்பட்ட உரையில்)

நகல்.
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இகோ/உதிரிகள்.

//ஆணைப்படி/ அனுப்பப்படுகிறது//

செயலாளர்
07/09/23

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவம் ராஜாஜி சாலை சென்னை–600 032